# ★ ஜனநாயகம் கொலை செய்யப்படுகிறது ★

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (8—6—50) வெளியூர் (9—6—50) [ இதழ் 273

## மூன்று சதவிகிதத்தினருக்கு ஏகபோக உரிமையா?

—(0)—

## வகுப்புவாரி பிரதிநிதித்வத்தை கண்டிப்பது வகைகெட்ட செயலே

—(0)—

## உண்மையை மறைத்து வைப்பது புண்ணை மூடி வைப்பது போலாகும்

—(0)—

## கல்வித் துறையில் சமத்துவம் நிலவாதவரை நாடுநலம்பெருது

### சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்ப்பு

'ஒரு சில ஆண்டுகட்கு முன்புவரை கல்வித்துறை முன்னேற்றம், இம்மாகாண மக்களில் நூற்றுக்கு மூன்று பேராக உள்ள ஒரு கூட்டத்தினருக்கே, ஏகபோக உரிமையாக இருந்து வந்திருக்கிறது. சமீப காலம்வரையில் இந்தக் கூட்டத்தினர் ஆங்கிலக் கல்வியால் பயனடைந்து வந்தனர். பல்கலைக் கழகப் படிப்பால், அவர்களே எல்லாத் துறைகளிலும் முன்னேற முடிந்தது. முக்கியமான பதவிகளிலெல்லாம் அவர்களே இருக்கின்றனர். வகுப்பு விகித சாரப்படி கல்வி கற்க வசதி அளிக்கும், ஏற்பாடு பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கிணங்க செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடாகும். இந்த ஏற்பாட்டைக்குலைக்க ஒரு சிறு கூட்டம் முயற்சிசெய்கிறது. இங்ஙனம் பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கு ஒரு சிறு குழுவினர் குறுக்கே நிற்பதைப் போன்ற ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் வேறெதுவும் இருக்க முடியாது.

பல்கலைக் கழகங்களிலும். அரசாங்க அலுவல்களிலும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையில் இடமளிப்பது பற்றி, பல்கலைக் கழகக் கல்வி ஆய்வுக் குழுவினர் வெளியிட்ட கருத்துகளுக்குப் பதில் கூறும் முகத்தான, சென்னை பல்கலைக் கழக சிண்டிகேட் வெளியிட்டிருக்கும் கருத்துக்களே, மேலே எடுத்துக்காட்டப்பட்டிருப்பவை. சிண்டிகேட் மேலும் கூறுவதாவது:—

"தென்னிந்தியாவில், இது பற்றி மாறுபட்டகருத்துக்கள் இருந்து வருகின்றன. இக்கருத்துவேற்றுமை உடைய ஒவ்வொரு சாராரும், மாற்றுக் கருத்துடையோரை எதிர்த்துப் போராடியவண்ணமிருக்கின்றனர் ஒவ்வொருசாராரும் தமது கொள்கையேநாட்டுக்கு நன்மை பயக்கவல்லது என்கின்றனர். ஆனால், பல்கலைக் கழக கல்வி ஆய்வுக்குழுவினர், இம்மாறுபட்ட கருத்துடையோரில் ஒரு சாராருடைய கருத்தினைமட்டுமே ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது."

'பல்கலைக்கழகத்தார் எந்தத் தனிப்பட்ட கொள்கைக்கும் ஆதரவு தருபவர்களல்ல. ஆனால், மாறுபட்ட கருத்துடையோருக்கும் இடமளிக்க வேண்டுவது அவசியம் என்பதை, பல்கலைக்கழகம் உணருகிறது"

"நாடு முன்னேற வேண்டுமானால் கல்வித்துறையிலும், சமுதாயத்துறையிலும் எல்லா வகுப்பினரும் முன்னேற வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, தற்போது இந்த மாகாணத்திலுள்ள பல்வேறு சாதியினருக்கு, உயர்தரக்கல்வி சமமாக அளிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைக்கு ஏது காரணமாக இருந்த போதிலும் சரி, இந்த நிலைமை மாற்றி அமைத்து, பின்தங்கிவிட்டவர்களை முன்னேற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டியது, நம் நாட்டவர் கடமையாகும் இதற்காக செய்யப்படும் எந்த தனி ஏற்பாடும் நாட்டுக்கோ அல்லது தனிப்பட்ட மனிதர்களுக்கோ ஊறுசெய்வதாகாது. இது நீதிக்குப் புறம்பானதுமல்ல"

"நூற்றுக்குமூன்றேபேராக உள்ள ஒரு கூட்டத்தினரே, எல்லாத் துறைகளிலும் முன்னேறியுள்ளனர். அவர்களிடம் சாதிப் பற்று அதிகமாகக் காணப்படுகிறது இந்தச்சாதிப் பற்று காரணமாகவே, அவர்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தேர்தல்

லண்டன், ஜூன் 7—

பிரிட்டிஷ் பொக்கிஷ ஸ்டாபோர்ட்கிரிஸ் பிரிட்டனின் பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று இலையுதிர் காலத்தில் கூறினர். தேர்தல் தேதியை பிரதமர் அட்லி உடனே நிர்ணயித்துவிடுவார் என்றும், கிரிஸ் இந்த ரிப்போர்ட்டைப் புது ஆண்டில் தருவதாக இருந்தால், தேர்தல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு ஒத்திப்போய்விடும் என்று. இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அடுத்த இலையுதிர் காலத்திலிருந்து பிப்ரவரி மாதத்திற்குள், பிரிட்டனின் பொருளாதார நிலைமை மிகவும் அபிவிருத்தியாகிவிடும் என்று, பிரிட்டிஷ் மந்திரிகள் அபிப்ராயப்படுகின்றனர்.

## நிறத்திமிர் ஆட்சி - நீடிக்கப்பார்க்கிறது

### தனக்குகந்த வாரிசுதேடுகிருர் மமதையாளர் மலான்

கேப்டவுன், ஜூன் 7—

தென்னுப்பிரிக்காவில், எதிர்காலத்தில் யார் அதிகாரத்திற்கு வருவார்கள், நிறத்திமிர் கொள்கை எவ்வளவு தூரம் நீடிக்கும் என்கிற விஷயம்பற்றி, ஹேஷ்யங்கள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

ஜெனரல் ஸ்மட்ஸுக்கு வயது 80 ஆகிவிட்டது. அவர் மிகவும் அசௌக்கியமுற்றிருக்கிருர். அவர் குணமடைந்தாலும், முன்புபோல் அரசியலில் ஈடுபடமாட்டார். மலான், ஸ்மட்ஸுக்கு 4 வயதுதான் சிறியவர். அவரும் தன் வாரிசைத் தேடிக்கொண்டிருக்கிருராம்.

இவருக்கு வாரிசாக, உள்நாட்டு மந்திரி டாக்டர் டோஞ்ஜெஸ்ஸைக் கூறலாம். நிறத்திமிர், ஒதுக்கல் கொள்கைகளுக்கு இவரே பாதி காரணம். இன மண்டல மசோதாவையும் பார்லிமெண்டில் கொண்டு வந்திருப்பவர் இவர்தான்.

ஸ்டிராஸம் என்பவரை ஸ்மட்ஸுக்கு வாரிஸாகச் சொல்லலாம். இவர் மலான் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்ப்பவர் (இதிலிருந்து இந்தியர் விஷயமாக அபிமானமுள்ளவர் என்று எண்ணக்கூடாது.)

தற்காலிகக் கலப்பு மந்திரிசபை ஏற்படலாம் என்று, சில வட்டாரங்களில் நம்பிக்கை இருந்து வருகிறது ஆனல், கலப்பு மந்திரிசபை ஏற்பட்டாக வேண்டிய அவசியம் ஏற்படின், ஹவெங்காவே தலைவராகக் கூடும்.

இன மண்டல மசோதாவை வாபஸ் பெற்றுல்தான், பதவி ஏற்க முடியும் என்று ஹவெங்கா நிபந்தனை விதிக்கலாம்.

### ஸ்மட்ஸ் உடல்நிலை

பிரிடோரியா, ஜூன். 7—

பீல்ட் மார்டில், ஸ்மட்ஸின் உடல் நிலைமை மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறதென்று கூறப்படுகிறது அவர் உடல் நிலைமைபற்றி அறிய ஆப்ரிக்க சுதேசிகளும் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர்.

—ருளோப்

### 'பிரிட்டானியைப் பிரித்துக் கொடு'

லண்டன், ஜூன். 7—

பிரான்ஸிலிருந்து. பிரிட்டானியைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்கிற கோரிக்கைமீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது.

பிரிட்டானி, பிரான்ஸுடன் ஐக்யமானதைக்குறிக்கும் ஞாபகச் சின்னத்தை, இந்த ஆர்பாட்டக்காரர்கள் 1932-ல் தகர்க்க முயற்சி செய்தனர்.

—ருளோப்

### அங்கும் இருக்கின்றனர்

லண்டன், ஜூன் 7—

இறந்த கணவனின் ஆவி பேசுவதாகவும் அந்த ஆவிபணம் கேட்டது போலவும் ஒரு பெண்ணை நம்பச் செய்து அவளிடம் 2000 பவுன் அபேஸ் செய்த ஒருபிரிட்டிஷ்காரர் மீது இப்பொழுது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

## பிரிட்டிஷ் பெண் திபேத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்

### உத்தரவின்றி உள்ளே நுழைந்ததன் விளைவு!

லண்டன், ஜூன் 6—

இந்திய எல்லையைக்கடந்து, பர்மிட் இல்லாமல் திபேத்திற்குள் சென்று ஐந்து நாள் தங்கிவிட்டு, திரும்பிவந்த வரலாற்றை ஒரு பிரிட்டிஷ் பெண் மிஸ்பீவான் டெய்லி டார்ஜிலிங் நிருபரிடம் கூறினர்.

எல்லைக் கட்டுப்பாடுகளை மீறியதற்காக, இவர் சிக்கிமல்லையில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டிருக்கிருர.

அவர் வெளியிட்ட விவரமாவது; 18000 அடி உயரமுள்ள பனியடர்ந்த டொன்கியா கணவாயை மிகவும் கஷ்டப்பட்டுக்கடந்து, ஷிகாட்ஸேக்குச் சென்றேன். அங்கே பஞ்சன்லாமாவின் விருந்தினராக இருந்தேன்.

'மதவிஷயமாக அறிய எனக்கு ஆவல் இருக்கிறது. நான் மாமிசம் சாப்பிடுபவள் அல்ல. நான் 'சுவிபாணமாகாதவள்' என்பதை அறிந்த திபத்தியர்கள், என்னை அன்புடன் வரவேற்றனர்'

இவர் உலகம் முழுவதுமே கிட்டத்தட்ட சுற்றியிருக்கிருராம். இவர் டார்ஜிலிங் வந்து சேர்ந்தவுடன், ஷிகாட்ஸே செல்ல அனுமதி கேட்டதாகவும், அதற்குப் பதில் வராததால், தானே அங்கு செல்ல அவர் முடிவு செய்ததாகவும் கூறினர்.

இவரிடம் பர்மிட் இல்லை என்று தெரிந்த பின், லாஸாவுக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அதற்கு இவரைப் பத்திரமாக வந்த வழியே திருப்பிக் கொண்டு விட்டுவிடும்படி பதில் வந்ததாகவும், அதன்படி அவர் திபேத்திற்கு வெளியே கொண்டுவிடப்பட்டாராம்.

—ருளோப்

## சினிமா மூலம் வர்த்தகம்

### கனடாவில் நூதன வியாபார முறை

ஆட்டவா, ஜூன், 7—

வாங்கவேண்டிய பொருள்களைச் சினிமாவில் காட்டும்போது பார்வையிட்டு 'டெலிவிடைப்' மூலம் ஆர்டர் கொடுத்து, சாமான்களை மறுநாளே வீட்டிற்குத்தருவிக்கும் நூதன முறை, பெம்புரோக் என்ற இடத்தில் இவ்வாரம் ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இனிவியாபாரிகள் பொருள்களை எடுத்துக்கொண்டு அலையவேண்டியதில்லை. இந்த சினிமா பிலிம்களை அங்கங்கே காட்ட ஏற்பாடு செய்ய வேண்டியதுதான் இனி அவர்கள் வேலையாக இருக்கும்.

### சென்னைக்கு 5000 டன் அரிசி

சென்னை, ஜூன். 6—

ஜலவீரா என்ற கப்பல் 7207 டன் பர்மா அரிசியுடன், ஜூன் 2-ந்தேதி கொச்சிக்கு வந்து சேர்ந்தது. இந்தக் கப்பலில் வந்திருக்கும் அரிசி திருவாங்கூர் - கொச்சிக்கு 2207 டன்னும், சென்னைக்கு 5,000 டன்னுமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிட்னி, ஜூன் 7—

சிட்னி துறைமுகத்தில் ஒரு மடக்கு பாலத்தைக் கட்ட, குறைந்தது 5 ஆண்டு பிடிக்கும் எனத் தெரிகிறது.

# மாலை மணி

சென்னை 8—6—50 வியாழக்கிழமை


# நல்ல தீர்ப்பு!

சென்னை மாநிலத்தைச் சேர்ந்த கல்லூரிகளில், குறிப்பாக அரசாங்கத்தின் தொழிற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் விதத்தில், சென்னை அரசாங்கம் கடைப்பிடித்து வரும் வகுப்புவாரி முறையைக் குறைகூறி, இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 'பல்கலைக்கழகக் கமிஷன்' அறிக்கையொன்றை முன்பு வெளியிட்டிருந்ததைப் பலரும் நன்கு அறிந்திருக்கக்கூடும்.

வகுப்புவாரி முறையைக் கையாளுவது, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் விதிக்கு மாறுபட்டதாகுமென்றும், வகுப்புவாரி முறை சமுதாயத்திலுள்ள வேறுபாடுகளைத் தேக்கிவைக்கவே பயன்படும் என்றும், ஆகவே, வகுப்புவாரி முறையைக் கைவிட வேண்டியது அவசியமாகும் என்றும் 'பல்கலைக் கழகக் கமிஷன்,' தன் அறிக்கையில் தெளிவுபடுத்தியிருந்தது.

குறைகூறும் பல்கலைக் கழகக் கமிஷனின் அறிக்கையை மறுத்து, சற்றுத் துணிவோடு—அறிவாராய்ச்சித் திறத்தோடு—தெளிவோடு — உண்மைக்குப் பரிந்துபேசும் நீதியோடு—நல்ல நிலைமை தேவை என்ற நேர்மை நோக்கோடு, சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் அவை, இப்பொழுது அறிக்கையொன்று வெளியிட்டிருப்பதைக் காண நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்; சிண்டிகேட் அவையினை மனமாரப்பாராட்டுகிறோம்; அதன் முடிவைப்பெரிதும் போற்றி வரவேற்கிறோம்.

சிண்டிகேட் அவை சென்னை மாநிலத்திலுள்ள நிலைமையைத் தெளிவாக்கி, வகுப்புவாரி முறையைக் கல்வி நிலையங்களில் கைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியிருப்பது, மிகவும் போற்றி மகிழத்தக்கதாக இருக்கிறது.

சமுதாயத்தில் வஞ்சகர்களால் ஏற்படுத்தப்பட்ட அநீதிமுறைகளால், ஒரு பிரிவு எல்லாவகையிலும் உயர்ந்து, இன்றியமையாத வசதிகளையெல்லாம் தேவைக்கு மேல் பெற்றுவாழவும், மற்றொரு பிரிவு எல்லாவகையிலும் தாழ்த்தப்பட்டு, இன்றியமையாத வாழ்க்கை வசதிகளெல்லாம் மறுக்கப்பட்டு வாழ்ந்துவரவும் ஆன நிலைமை, இந்நாட்டில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருகிறது. சமுதாய அநீதிகளால் [illegible]ழைக்கப்பட்ட மேடுபள்ளங்களைப் போக்கி, சமத்துவ சமுதாய வாழ்வைக் காணவேண்டிய, நீதிக்கட்சியினர், நாட்டை ஆண்ட காலத்தில், வகுப்புவாரி முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர். அவர்களுடைய நோக்கம், மேட்டைக் கரைக்க வேண்டுமென்பதல்ல, பள்ளத்தை மேடு அளவுக்கு உயர்த்தி மேட்டோடு சரிசமத்துவமாகக் கொண்டுவர வேண்டும் என்பதேயாகும். கல்வி வசதி அளிக்கப்படாமலும், கல்வி கற்றதன் மூலம் சமுதாய வாழ்வுக்கான ஏணியில் ஏறமுடியாமலும், பள்ளத்திலே தள்ளப்பட்டு அழுந்திக் கிடந்த பார்ப்பனரல்லாத மக்களைக் கரை ஏற்றவேண்டி, கல்வி வசதி ஏணியை வகுப்புவாரி முறை என்ற உதவிக் கருவியின் மூலம், சற்றுப் பள்ளத்தில் இறக்கி, மேலே ஏறிவர வசதி செய்து கொடுத்தனர். அதன் மூலம், பார்ப்பனரல்லாத மக்களில் ஒரு சிலர் மேல் ஏறி, மேட்டுக்குடியினரோடு சமத்துவமாக வாழ ஒரு சிறிது வழி ஏற்பட்டது.

தொன்று தொட்டு வளர்ந்து வந்த வசதிகளையெல்லாம் பெற்றுக்கொண்டு வாழும், மேட்டுக்குடியினராக, நாட்டில் நூற்றுக்கு மூன்று பேராக உள்ள பார்ப்பனர்கள் இருந்து வருகிறார்கள்; அதே நிலையில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர்களாக உள்ள பார்ப்பனரல்லாதார், பள்ளம்படுகுழிகளில்தான் இன்னமும் கிடந்து தவிக்கிறார்கள். கல்வி வசதி என்ற ஏணி இதுவரையிலும் மேட்டுக்குடியினர் வாழும் மேட்டிலேயே வைக்கப்பட்டிருந்ததால், வாழ்க்கை வசதிகள் நிலையை அவர்களால் எளிதில் எட்டிப்பிடிக்க முடிந்தது. பள்ளங்களில் அழுந்திக் கிடந்த பார்ப்பனரல்லாத மக்கள், கல்விவசதி ஏணியை எளிதில் பிடித்துக்கொள்ள முடியாததால், வாழ்க்கை வசதிகள் நிலைக்குப் போகமுடியாமலே தவித்து வந்தனர். நீதிக்கட்சியாரின் முயற்சியால், கல்விவசதி ஏணி, பள்ளங்களில் வாழ்வோர் சற்றுச் சலுவாக ஏறிவரும் பொருட்டு, வகுப்புவாரி அடிப்படையில் அவர்கள் பக்கம் சற்றுத்தாழ்த்திக் கொடுக்கப்பட்டது. அப்படி ஏறிவந்தவர்கள் மிகச் சிலர்தான்; சமத்துவ நிலைக்கு வரவேண்டியவர்கள் இன்னும் ஏராளமாக இருக்கிறார்கள். நூற்றுக்கு மூன்றுபேராயுள்ள ஆதிக்க வகுப்பினர் ஏகபோகமாகத் தாங்களே அனுபவித்து வந்த வசதிகளிலே, பார்ப்பனரல்லாதாராகிய திராவிடர்களும், பங்கு பெறுகிறார்கள் என்பதைக்கண்டு பொருமைப்பட்டு, வகுப்புவாரி முறையை எதிர்த்து எங்கும் பெருங்கூச்சலிட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட சுயநல, வஞ்சக, சூழ்ச்சிச் சுரண்டல்காரர்களெல்லாம் வாயடைத்து உட்காரும் வண்ணம், சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட் அவை, அருமையான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் வகுப்புவாரி முறையை ஆதரித்து ஒரு இனமும், அதனை எதிர்த்து ஒரு சுயநல இனமும் தத்தம் கருத்தை வெளியிட்டு வரும்போது, இரண்டு வித கருத்துக்களை ஆராய்ந்து நடு நிலைக்குவரவேண்டிய பல்கலைக் கழகக் கமிஷன்,' அப்படிச் செய்யாமல் வகுப்புவாரி முறையை எதிர்த்து வரும் இனத்தின் கருத்தை மட்டும் தெரிந்துகொண்டு, அதற்குச் சாதகமாக ஒருதலைப் பட்சமான தீர்ப்பைக், கமிஷன் வெளியிட்டுள்ளது என்று, சிண்டிகேட் அவை தெரிவித்திருப்பது, மிகமிக உண்மையாகும். 'பல்கலைக் கழகக் கமிஷன்' எவ்வளவு நீதியற்ற முறையில் தீர்ப்பு தந்துள்ளது என்பது சிண்டிகேட்டின் அறிக்கையிலிருந்தே தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

சென்னை மாநிலத்திலுள்ள மக்கள் வேறுபாட்டின் நிலையையும், ஒரு சிறு கூட்டம் சமுதாய அநீதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, வாழ்க்கை வசதிகளையெல்லாம அனுபவித்து வந்திருக்கிறது என்ற தன்மையையும் சிண்டிகேட் அவை, தன் அறிக்கையில் அழகுபட எடுத்துக் கூறியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் வரையில் கல்விவசதி, நாட்டில் நூற்றுக்கு மூன்றுபேராகஉள்ளவர்களுக்கே உரிமையாக்கப்பட்டு வந்தது. ஆங்கிலக் கல்வியால் பலன் அடைந்தவர்கள், இந்த நூற்றுக்கு மூவரேயாவார்கள். அதனால், ஏற்பட்ட பலன்களையெல்லாம் அனுபவித்தவர்களும் அவர்களேயாவார்கள். பல்கலைக் கழகப் படிப்பு அவர்களுக்குத் தலைமைப்பதவிகளைத் தந்தது. அரசாங்க அலுவல்களையும், பொதுவாழ்விலுள்ள பதவிகளையும் அவர்களால் கைப்பற்ற முடிந்தது. இன்றைய சமுதாய வாழ்விலுள்ள முக்கியமானபதவிகளையெல்லாம், அவர்களே பெருவாரியாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் அழுத்தமான வகுப்புவாத உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். சௌகரியமாக இருக்கும் தங்கள் நிலையை, அப்படியே நிலைநிறுத்திவைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.''

இந்த அரிய அழகுமொழிகளைக் கூறியவர்கள், காங்கிரஸ்காரர்களால் அடிக்கடி வகுப்புத் துவேஷிகள் என்று திட்டப்படுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தாரல்ல; எக்கட்சியையும் சாராமல், அரசாங்கத்திற்கு அருந்துணையாக இருக்கும் பல்கலைக்கழக சிண்டிகேட் அவையே அப்படிக் கூறியுள்ளது. இந்த உண்மைக் கருத்துக்களை சிண்டிகேட் அவையார் எடுத்து விளக்கிக் கூறிய பிறகேனும், காங்கிரஸ்காரர்கள் பலரின் கண் திறக்குமா என்பது, நமக்கு ஐயப்பாடாகவே இருக்கிறது. நூற்றுக்கு மூன்று பேர்களாக உள்ளப்பார்ப்பனர்கள், கல்வி வசதியைப் பெற்று எவ்வளவு உயர்ந்த வாழ்வில், எவ்வளவு வகுப்புவாத உணர்ச்சி கொண்டு வாழ்கிறார்கள் என்பதைக்கண்டறிய, இதைவிட வேறு அழகான படப்பிடிப்பு, எதையும் நாம் காணமுடியாது.

வகுப்புவாரி முறையைக் கையாளுவது, ஜனநாயகக் கருத்துக்கு மாறுபட்டதாகும் என்ற எண்ணத்தை நாடெங்கும் பெருங் கூச்சலின் மூலம் புகுத்தி வரும் ஆதிக்க வகுப்பாரின் தன்மையை சிண்டிக்கேட் அவை தவிடுபொடியாக்கிக் காட்டுகிறது.

"இப்பொழுது செய்திருக்கும் ஏற்பாடு, சென்னை மாநிலத்தில் வாழும் பெரும்பான்மையான மக்களின் விருப்பங்களை ஒட்டியதேயாகும். ஒரு மிகச் சிறிய சிறுபான்மைக் கூட்டத்துக்காக இந்த ஏற்பாட்டை மாற்றுவது என்றால், இதைவிட ஜனநாயகக் கொள்கைகளுக்கு மாறுபாடான செயல் வேறு ஒன்றுஇருக்கமுடியாது."

பெரும்பான்மையோர் கருத்துக்கு இணங்குவது ஜனநாயகமா? அல்லது சிறுபான்மையோர் கருத்துக்கு இணங்குவது ஜனநாயகமா? என்று சிண்டிகேட் அவை கேட்கிறது. நூற்றுக்கு மூன்றுபேர்களாக உள்ளவர்களின் சுயநலக் கூச்சலுக்கு இணங்கி, இந்த வகுப்புவாரி முறையை மாற்ற இடங்கொடுப்பதைப் போன்ற, ஜனநாயகக் கொள்கைக்கு மாறுபாடான செயல் வேறுஒன்று இருக்க முடியாது என்ற கருத்துப்பட, அறிக்கையை வெளியிட்டிருக்கும் சிண்டிகேட் அவையை திராவிடப் பெருங்குடி மக்கள் யாவரும் பாராட்டாமலிருக்க முடியாது.

கல்வி நிலையங்களில் இருக்கும் சிறு வசதிகளையும் ஒரு சிறு கூட்டம்சுரண்டிக்கொள்வதற்கு இடங்கொடுத்தால், வகுப்புவேற்றுமைகளும், உயர்வு தாழ்வுப்பிரிவுகளும் மேலும் மேலும் வளர வழி ஏற்படுமேயல்லாமல், நீங்க வகை கிடைக்காது என்பதையும் சிண்டிகேட் தெளிவுபடுத்தியுள்ளது.

"மேல்படிப்புக்காகவும், தொழிற் கல்விக்காகவும் இருக்கிற சிறு வாய்ப்புகளெல்லாம், ஒரு சிறு கூட்டத்துக்கே செல்லும்படியான சுரண்டல் முறை ஏதேனும் ஏற்பட்டால், ஜாதி மத வேறுபாடுகளைத் தடுப்பதற்கு என்று ஏற்பட்ட கல்வி, அவைகளை மேலும் மேலும் வளர்க்கப் பயன்படுவதாகவே முடியும்."

வகுப்புவாரி முறையைக் கையாளுவதன் நோக்கத்தையும், சென்னைப் பல்கலைக் கழகசிண்டிகேட், திட்ட வட்டமாக எடுத்துக் கூறியுள்ளது.

"இரண்டு மாறுபட்டக்கருத்துக்களிடையே பிளவை வளர்க்க வேண்டுமென்பதல்ல பல்கலைக் கழகத்தின் நோக்கம்: ஆனால் அக்கருத்துக்கள் நடை முறையில் இருப்பதை மறைப்பதற்கில்லை'' என்பதாகும்.

இவ்வாறாக, 'பல்கலைக் கழகக் கமிஷன்' ஒருதலைச் சார்புடையதாக அளித்தத் தீர்ப்பைத், தக்க பல காரணங்களோடு, நீதிவழுவா நெறிமுறையில் நின்று, தகர்த்தெறிய முன்வந்த சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் அவையைப் பாராட்டுகிறோம்; அது வெளியிட்ட அறிக்கையை நல்ல தீர்ப்பு! என்று கூறிப் போற்றுகிறோம்!

## நரேந்திரதேவ் பதவி நீடிப்பு

புதுடில்லி ஜூன் 7—

ஆசாரியா நரேந்திரதேவ் லக்ஷ்மணபுரி சர்வகலா சாலையின் உப அத்யக்ஷர் பதவியில் நீடித்து இருக்க சம்மதித்திருக்கிறார். மாணவர்களும், சர்வகலாசாலை சிண்டிகேட்டும் மிகவும் வற்புறுத்தியதின் பேரிலேயே தோழர் தேவ் பதவியில் இருக்க சம்மதித்திருக்கிறார்.

## பறக்கும் தட்டு பழைய ரகசியமே!

லண்டன், ஜூன் 7—

தென்கென்சிங்டன் விஞ்ஞான மியூஸியத்தின் 'ஏரோநாடிக்ஸ்' பகுதி திறந்து வைக்கப்பட்டபோது, இன்றுவரை ஒரு பெரும் புதிராகவே இருந்துவந்த 'பறக்கும் தட்டு' பற்றிய சில விவரங்கள் தெரிய வரும் என்று தெரிகிறது.

1914-18-ம் வருஷ யுத்தத்தில் ரிச்சர்ட்ஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 'பறக்கும் தட்டு' ஒன்று இதில் இடம் பெற்றிருக்கிறதாம்.

இதைத்தயாரித்தரிச்சார்ட்ஸ் கூறுவதாவது:—36 வருஷங்களுக்குமுன் இதை நான் செய்தேன். யுத்தம் முடிந்த பின் இதை இன்னும் சீர்படுத்தும் வேலைக்குப் போதியபடி பணம் செலவழிப்பவர்கள் யாரும் இல்லை. ஆகவே, இதை இத்துடன் விடவேண்டி வந்தது.

இப்பொழுது காணப்படும் பறக்கும் தட்டுகள் இதைப் போன்றதுதான். இப் பறக்கும் தட்டு மணிக்கு 85 மைல் தான் சென்றது. இப்பொழுதுள்ள 'பறக்கும் தட்டுகள்' இன்னும் அதிக வேகத்தில் செல்லக்கூடியதாக இருக்கின்றன.

## 30 ஆயிரம் வானொலிகளுக்கு அனுமதி

சென்ற ஆண்டில் 30 ஆயிரம் வானொலிகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டன என்று, டில்லி தபால் இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சோழவந்தான் மாநாட்டுக்கு வரும் தோழர்கள் கவனிக்க

மதுரை, ஜூன் 5—

சோழவந்தான் ரயில்வே நிலையம் மதுரை ஜங்ஷனிலிருந்து வடக்கே 13-வது மைலில் இருக்கிறது. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தவிர, மற்ற வண்டிகள் அனைத்தும் சோழவந்தானில் நிற்கும். சென்னைப் பகுதிகளிலிருந்து வரும் தோழர்களுக்கு, தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஏற்றதாக இருக்கும். மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்குத் தக்க இடவசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எம். அய்யாசாமி

விளம்பர உறுப்பினர்

## இனி நடப்பவை

சொன்னாச்சி:—9—6—50 மாலை 4-30 மணி அளவில், அன்சார் தெரு 15 என்னும் [illegible] இளஞ்சேரன் இல்லத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் புத்தாண்டு தேர்தலும், எதிர்கால ஆக்க வேலைகளைப்பற்றியும், சென்ற ஆண்டு வரவு செலவு கணக்கும் கவனிக்கப்படும்.

* * *

சைதாப்பேட்டை : மறுமலர்ச்சி மன்றத்தின் செயற்குழுக்கூட்டம் 9—6—50 அன்று மாலை 6 மணிக்கு சடையப்பமுதலித் தெருவிலுள்ள 2-வது எண்ணுள்ள இல்லத்தின் மேல் மாடியில் நடைபெறும்.

* * *

புரசை:-தி.மு. கழக செயற்குழுக் கூட்டம் (9-6-50) வெள்ளி இரவு 8-மணிக்கு புரசைவாக்கம் நைடரோட் சத்திரம் தையற்கடையில் நடைபெறும். அவ்வமயம் அடுத்த பொதுக்கூட்டம் நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

# “இலட்சியவரலாறு” வழக்கு விசாரணை ஆரம்பம்

—(:)—

## அண்ணுதுரை விசாரிக்கப்பட்டார்

—(...)—

## சர்க்கார் மொழிபெயர்ப்பாளர் சாட்சியம்

சென்னை, ஜூன் 7— “இலட்சிய வரலாறு” வழக்கு இன்று மாகாணமுதல் மாஜிஸ்ட்ரேட் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புத்தகத்தைத் தீட்டிய தோழர் சி என். அண்ணுத்துரை, அச்சிட்ட தோழர் பி. ராதாகிருஷ்ணன், வெளியிட்ட தோழர்கள் டி. வி. கண்ணன், டி. வி. முத்து கிருஷ்ணன் ஆகிய நால்வரும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்கள்.

போலீஸ் அதிகாரி “இலட்சிய வரலாறு” என்ற புத்தகம் வகுப்பு வேற்றுமையை வளர்ப்பதாக உள்ளதென்றும், அப்புத்தகத்தில் 18, 24, 25, 45, 91 வது பக்கங்களில் உள்ள சில பகுதிகள் சட்டவிரோதமாக உள்ளதென்று சர்க்கார் கருதுவதாக அறிவித்தார்.

வழக்கைச் சமர்ப்பித்த போலீஸ் அதிகாரியை, மூன்றுவது நான்காவது எதிரிகளின் வக்கீலான தோழர் பார்த்தசாரதி நாய்க்கர் குறுக்கு விசாரணை செய்தார். இலட்சிய வரலாற்றிலுள்ள பகுதிகளில், சில வகுப்பு வேற்றுமை வளர்க்கிறதாக உள்ளதென்று முடிவு செய்வதற்குமுன், படித்த பார்ப்டனப் பண்டிதர்கள் கலந்தாலோசிக்கப்பட்டார்களாவென்று முதல் கேள்வியாகத் தோழர் பார்த்தசாரதி நாய்க்கர் கேட்டார். மேலும் ஆரியன் என்பது யாரைக் குறிக்கிறதென்று அவருக்குத் தெரியுமா என்று கேட்டார்.

ஆரியர் என்பது பார்ப்பனர்களைத்தான் குறிக்கிறதென்று சர்க்கார் சாட்சி கூறினர்.

கேள்வி:-ஆரியரின் மொழி எது வென்று தெரியுமா?

பதில்:-முதலில் சமஸ்கிருதமாக இருந்தது, பின்பு அது தமிழாக மாறியது.

கேள்வி:—ஆங்கிலேயரும் ஆரியர் என்பது உமக்குத் தெரியுமா?

பதில்;—எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது.

கேள்வி:—முஸ்லீம்களும் ஆரியர் என்பது உமக்குத் தெரியுமா?

பதில்:—நான் அதை அறிய மாட்டேன்.

நீதிபதி இடைமறித்து, ஒரு ஆரியர் முஸ்லிமாகி இருந்தால் அவர் முஸ்லிம் ஆனலும் ஆரியர்தான் என்று கூறினர்.

“இலட்சிய வரலாறு ‘திராவிடநாடு’ என்றவார இதழில 1944லிருந்து 48 வரை பலதடவைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின்தொகுப்பைக்கொண்டதொரு புத்தகம்; இப்புத்தகம் 1949-ல் வெளியிடப்பட்டது; சில கட்டுரைகள் ‘திராவிடநாட்டில்’ தலையங்கங்களாகவும், மற்றவை கட்டுரைகளாகவும் வெளியிடப்பட்டவை” என்று வக்கீல் பார்த்தசாரதிநாய்க்கர் கூறினர்.

“‘திராவிடநாட்டில்’ இக்கட்டுரைகள் எழுதப்பட்டபோது நாம் அடிமைகளாக இருந்தோம்; அன்று சுயேச்சைக்காகப் பலர் பலவிதமாகப் போராடி வந்தார்கள்; அன்று இருந்த நிலைமையே வேறு. சர்க்கார்கூட அப்பொழுது இதைப்பற்றி ஒன்றுமே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை” யென்று அவர்மேலும் கூறினர்.

நான்காவது எதிரி, திராவிடப் பண்ணையின் பங்குதாராக புத்தகம் வெளியிடும் போது இல்லையென்று அவர் அறிவித்தார். இது போலீஸ் அதிகாரிக்குத் தெரியுமாவென்று அவர் கேட்டார்.

தனக்குத் தெரியாதென்று சர்க்கார் சாக்ஷி பதிலளித்தார.

கேள்வி:—1941ல் திராவிடப் பண்ணையின் பங்குப் பிரிவினை ஆகிவிட்டதென்று உமக்குத் தெரியுமா?

பதில்:—திராவிடப் பண்ணைக்குத் தனக்கு வரும் கடிதங்களையெல்லாம கொடுத்துவிடும்படி மூன்றுவது அதிகாரி :தெப்பக்குளம் போஸ்ட் மாஸ்டருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதைக்கொண்டு அவர் திராவிடப் பண்ணையின் பங்குதாரராக இருக்கிறுரென்று முடிவு செய்தேன்.

### மொழி பெயர்ப்பாளர் சாட்சியம்

அடுத்தபடியாக சென்னை சர்க்காரின் பிரதான மொழிபெயர்ப்பாளரும், புத்தக ரெஜீஸ்ட்ராருமாகிய தோழர் விநயகம் பிள்ளை, குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சர்க்கார் வக்கீல் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் ‘இலட்சியவரலாறு’ என்ற புத்தகம், புத்தக ரிஜிஸ்ட்ரார் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டதாகவும், அப்புத்தகம தோழர் சி, என். அண்ணுத்துரையால் எழுதப்பட்டு, ராயல்அச்சகத்தில் அச்சடித்து திராவிடப்பண்ணையால்வெளியிடப்பட்டதென்று குறிக்கப்பட்டதென்றும், முதல் பதிப்பாக மூவாயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருந்ததென்றும் அறிவித்தார். முதல் எதிரிவக்கீல தோழர் நாராயணசாமிமுதலியார், மொழிபெயர்ப்பாளரைக்கீழ்க்கண்டவாறு குறுக்கு விசாரணைசெய்தார்.

“நீங்கள் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்திருப்பதில் வேறு பொருள் படும்படியாகச்செய்திருக்கிறீர்; இல்லாததைக்கூடச் செய்துவிட்டிருக்கிறீர்களே” என்று தோழர் நாராயணசாமிமுதலியார் கூறினர்.

தொடர்ந்து வந்துள்ள வார்த்தைகளைக்கொண்டு அவ்வகையில் மொழிபெயர்த்துள்ளதாக சாட்சி அறிவித்தார்.

ஆங்கில மொழி பெயர்ப்பைக்கொண்டு வழக்கை நடத்த போவதில்லையென்றும், தமிழ் தனக்கு நன்கு தெரியுமாகையால், தமிழ்ப்புத்தகத்தைக்கொண்டேவழக்கை நடக்கப்போவதாகவும் மாஜிஸ்ட்ரேட் அறிவித்தார்.

பின்பு, மூன்றுவது நான்காவது எதிரிகளின் வக்கீல் நடத்திய குறுக்கு விசாரணையாவது:—

கேள்வி:—உங்களுக்குச் செய்தித்தாள்களும் வருகின்றனவா?

பதில்:—தின இதழ்கள்வருவதில்லை; வார இதழ்கள் வருவதுண்டு, ‘திராவிட நாடு’ வருகின்றது.

கேள்வி:—‘திராவிட நாட்டை’த் தாங்கள் படிப்பதுண்டா?

பதில்;— இல்லை.

கேள்வி.—படிக்க வேண்டியது, உங்களுடைய கடமையல்லவா?

பதில்:—கட்டாயம்ஒன்றும் இல்லை.

கேள்வி:—வேற்றுமை அதிகரிக்கக் கூடிய பகுதிகளை மொழி பெயர்க்கச்சொன்னது யார்?

பதில்: - சர்க்கார்

கேள்வி:—சர்க்கார் என்றால், கவர்னரா. மந்திரிகளா அல்லது வேறு யார்?

எந்த சர்க்கார் உத்திரவும் கவர்னர் பேரால்தான் விடப்டுமென்று மாஜிஸ்ட்ரேட் அறிவித்தார்

கேள்வி:—‘இலட்சிய வரலாறு’ முழுவதையும் மொழிபெயர்க்கும்படி உமக்கு உத்தரவு கிடைத்ததா?

பதில்:—ஆட்சேபணைக்குரிய பகுதிகளைமட்டும், மொழி பெயர்க்கும்படி உத்திரவு.

கேள்வி:—உத்திரவுஎங்கே?

பதில்:—அப்படி உத்திரவு ஒன்றும் இல்லை; நானேதான் மொழிபெயர்த்து அனுப்பினேன்.

கேள்வி:—யாருக்கு அனுப்பினீர்?

பதில்:—செய்திப் போக்குவரத்து இலாகாவுக்கு

கேள்வி: - சர்க்கார் கேட்கப்பட்டதற்கு முன், நீர் திராவிடநாடு படித்ததில்லையா?

பதில்:—புத்தகம் எனக்கு 1949-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் எனக்குக் கிடைத்தது. ஆட்சேபகரமானசெய்திகள்வந்தால், மொழிபெயர்த்து அனுப்பவேண்டுமென்று சர்க்காரின் பொதுவான உத்திரவு இருக்கிறது. அதனால் நான், நானே மொழிபெயர்த்து 1949-மே மாதம் சர்க்காருக்கு அனுப்பினேன்.

“சர்க்கார் மொழி பெயர்க்கும்படி கேட்டதா அல்லது நீங்களே இந்தப் பகுதிகளை மொழி பெயர்த்தனுப்பினீர்களா” என்று மாஜிஸ்ட்ரேட் சாட்சியைக் கேட்டார்.

பதில்:—சர்க்கார் கேட்கவில்லை. நானே மொழிபெயர்த்தனுப்பினேன்.

மாஜிஸ்ட்ரேட்:—சர்க்கார் எந்தப் பகுதியையும் குறிப்பிட்டுமொழிபெயர்த்துஅனுப்பும்படி கேட்கவில்லை; நீங்களே உங்களுக்கு ஆட்சேபகரமானதென்று பட்ட பகுதிகளை மொழி பெயர்த்து அனுப்பினீர். அப்படித்தானே?

பதில்:—ஆமாம்.

“முதலில் சர்க்கார்தான் மொழி பெயர்க்கும்படி கேட்டதென்றுகூறினீர்களே” என்று மாஜிஸ்ட்ரேட் கூறினர்.

அடுத்த படியாக பிரதான மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட் குமஸ்தா, தோழர் பி, நாராயணனும், தபால் இலாகா இன்ஸ்பெக்டர் தோழர் வி. ஜீவரத்தினமும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்கள்.

### அண்ணுத்துரை

சர்க்கார் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் ‘இலட்சியவரலாறு’ தீட்டிய தோழர் சி. என். அண்ணுத்துரை, மாகாண மாஜிஸ்ட்ரேட்டால் விசாரிக்கப்பட்டார்

மாஜிஸ்ட்ரேட்:—உம்முடைய தொழில் என்ன?

அண்ணுதுரை:—நான் ஒரு எழுத்தாளன். 12 வருடங்களாக எனக்கு அந்த அனுபவம் உண்டு.

கேள்வி:—தாங்கள் ‘எம்.ஏ.’ பட்டம் பெற்றவரா?

பதில்:—ஆம்

கேள்வி:-நீங்கள் ‘திராவிட நாட்டின்’ ஆசிரியரா?

பதில்:—ஆம்

கேள்வி:—பல புத்தகங்களை நீர், எழுதியிருக்கிறீர் அல்லவா?

பதில்:—ஆம்; அப்படித்தான்.

கேள்வி:—‘இலட்சிய வரலாறு’ நீர்எழுதியது தானே?

பதில்:—ஆமாம், அது ‘திராவிட நாட்டில்’ 1944லிருந்து, 48 வரை எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

கேள்வி:—இப்புத்தகம் எழுதுவதில் தங்களுடைய நோக்கம் என்ன?

பதில்:—சமூக நீதி கிடைக்க வேண்டுமெனபதுதான்.

கேள்வி:—வகுப்புத் துவேஷம் வளர்க்க வேண்டுமென்பது,உங்களுடையநோக்கமா?

பதில்:—இடையவே கிடையாது.

கேள்வி:—சமூக நீதி வளர்க்கவேண்டுமென்பதுதான், உங்கள் நோக்கமா?

பதில்;—ஆம்

கேள்வி:—நீங்கள் ஒரு ஆரியரா அல்லது திராவிடரா?

பதில்:—நான் திராவிடப் பண்பாட்டைப் பின்பற்றுகிறேன்.

கேள்வி:—நான் தெரிந்து கொள்ள விரும்புவது, தாங்கள் ஆரியரா அல்லது திராவிடரா என்பதுதான்.

பதில்:—நான், என்னைத் திராவிடன் என்றுதான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது எதிரி தோழர் பி. ராதாகிருஷ்ணன் விசாரிக்கப்பட்டார். விசாரணைக்குப் பின், அவர் ஒரு மனுவை கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

மூன்றுவது எதிரி தோழர் கண்ணன் விசாரிக்கப்படுகையில், தான் திராவிடப்பண்ணையின் பங்குதாரராக முன்பு இருந்ததாகவும் இப்பொழுது இல்லையென்றும் கூறினர். நான்காவது எதிரி தோழர் முத்துகிருஷ்ணன் விசாரிக்கப்படுகையில திராவிடப்பண்ணை நிர்வாகம் தம்வசம் இருப்பதாக அறிவித்தார்.

வழக்கு ஜூன் 21-ந் தேதிக்குத் தள்ளிவைத்திருப்பதாக, முதல் மாகாணமாஜிஸ்ட்ரேட் தோழர் ராமசாமி கவுண்டர் அறிவித்தார்.

---

## ஜனநாயகம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் முன்னேற்றம். நீடித்து வருகிறது”,

“இன்றயத்தினம், இந்தியாவுக்கு இன்றியமையாததுவேண்டப்படுவது கல்வி. அக்கல்வி எங்கும், எவர்க்கும் அளிக்கப்படவேண்டும்.

அவ்வப்போது திறக்கப்படும் கல்வி நிலையங்கள், ஒரு கூட்டத்தினரின் சுரண்டலுக்கே பயன்படும் நிலை ஏற்பட்டால், கல்வித்துறையில் காணப்படும் எத்தகைய வேற்றுமையைக் களைய நாம்முற்படுகிறுமோ, அத்தகைய வேற்றுமை, மேலும் மேலும் வளர்ந்து நமது திட்டத்தையே சிதைத்துவிடும்”

“வகுப்பு விகிதாசாரப்படி கல்வி அளிக்கும் முறையால் தான்; கல்வித்துறையிலும், தலைமைப்பதவி வகிக்கும் முறையிலும் சமத்துவத்தைக் காண முடியும்” பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இடமளிக்கும் விஷயத்தில் ஜாதி, மதம் முதலிய பற்றை விசாரிப்பது கூடாது என்று சொல்லப்படுவது; உண்மையை மறைப்பதும், மக்களை அறியாமையில் ஆழ்த்தச் செய்வதும் ஆன முயற்சிகளேயாகும். இதனால், எவ்வித முன்னேற்றத்தையும் காண முடியாது”

“வகுப்பு விகிதாசார முறை தேசிய உரிமைக்கும், ஊறு தேவேது என்று ஆய்வுக்குழு கருதுமானல், தென்னிந்தியாவில் அரசாங்கக் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட அளவிலே தான், அது தனது கருத்தை செலுத்தியிருக்கிறது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

தனிப்பட்ட ஸ்தாபனங்களோடு, சர்க்கார் ஸ்தாபனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், சர்க்கார் ஸ்தாபனங்களின் எண்ணிக்கை மிகமிகக்குறைவு என்பது தெரியவரும். தனிப்பட்ட நிர்வாகத்தில் நடைபெறும் ஸ்தாபனங்களில் நடைமுறையில் விரும்பியவர்களுக்கு இடமளிக்கும் முறை இருந்துவருகிறது. இதனை ஆய்வுக்குழு கவனித்திருக்க வேண்டும். இம்மாதிரி விருப்பப்படி இடமளிக்கும் முறையால் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கே அதிக இடம் கிடைத்து வருகிறது. இது நடைமுறையில், காணப்படும் உண்மை”

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**12 - 6 - 50**

கச்சமங்கலம் :—சி. பி. சிற்றரசு.

**13 - 6 - 50**

தேனி :—சி. என். அண்ணாத்துரை.

## பெர்னார்ட்ஷாவிடம் ஏமாந்த அமெரிக்க நடிகர்

லண்டன், ஜூன் 7—

இங்கிலாந்தில், தான் பெர்னார்ட் ஷாவைச் சந்தித்த விபரம் பற்றி, பிரபல அமெரிக்க நடிகர் ரிச்சர்ட் விட்மார்க் குறிப்பிட்டிருக்கிறார்.

பெர்னார்ட்ஷா வேலிக் கடம் பிடிக்க தன்னை அனுமதிக்கமாட்டார் என்று இவருக்கு ஒரு எண்ணம். ஆகவே, இவர் ஷா வசிக்கும் கிராமத்திற்குவந்து, அவர் வீட்டுப் புறக்கடைப்பக்கமாக வேலியைத் தாண்டிக் குதித்து ஷா வந்ததும் அவரை படமெடுத்துவிடுவதென்று காமிராவுடன் தயாராக இருந்தார். சுமார் இரண்டு மணி நேரம் காத்திருந்தும ஷா வருவதாகக் காணோம்.

ஆகவே, அந்நடிகர் ஷா வீட்டின் முன்பக்கம் வந்தார். அங்கு அவர் கண்டகாட்சி, அவரை ஏமாற்றத்திற்குள்ளாகிவிட்டது. ஷா கையெழுத்து வேண்டுபவர்களுக்குக்கையெழுத்துப் போட்டுக்கொண்டும், போட்டோ பிடிப்பவர்களுக்கு 'போஸ்' கொடுத்துக்கொண்டும் அங்கு நின்றிருந்தாராம்.

---

## இந்தியாவுக்கு அலுமினிய தோணிகள்

லண்டன், ஜூன் 7—

கடலில் உபயோகிக்கத் தக்க அலுமினிய தோணிகளை இந்தியா, பர்மா, சிரீஸ், மேற்கு ஆப்பிரிக்கா, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகிய நாடுகள் வாங்கியிருக்கின்றன.

---

## மான்கள் விற்பனை

லண்டன், ஜூன் 7—

உலகிலேயே மிக அபூர்வமானதும், செல்டென்ஹாமில் அனேக ஆண்டு காலமாக வாழ்ந்து வருவதுமான வெள்ளைமான்களை, பாராவது அமெரிக்கர் வாங்க முன்வந்தால், டாலர்களுக்கு விற்றுவிட முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இவை, நல்ல வெண்மை நிறமுடையவைதாம்.

---

## அபராதமாய் ரூ. 6065 வருமானம்

புதுடில்லி, ஜூன் 7—

கேட்பாரற்றுத் திரிந்த மாடுகளை பவுண்டில் அடைத்து, அதன் சொந்தக்காரர்களிடமிருந்து அபராதம் வசூலித்ததின் மூலம், புதுடில்லி முனிசிபாலிட்டிக்கு ரூ 6065 வருமானம் சென்ற மாதத்தில் கிடைத்திருக்கிறது. பவுண்டில், 573 கால்நடைகள் அடைக்கப்பட்டனவாம்.

---

## ஆஸ்திரேலியாவில் அதிக அரிசி உற்பத்தி

சிட்னி, ஜூன் 7—

ஆஸ்திரேலியாவில் இவ்வாண்டு அரிசி உற்பத்தி 70,000 டன்களை எட்டிவிடுமென்று தெரியவருகிறது. சென்ற ஆண்டு 67,000 டன் அரிசி உற்பத்திச் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு ஏகராவுக்கு 2 லிருந்து 3 டன் என்ற விகிதத்தில் நெல் உற்பத்திசெய்யப்பட்டிருக்கிறது.

## தபால்ஆபீஸில்திருட்டு!

கும்பகோணம், ஜூன் 6—

ரிஜிஸ்டர் செய்து அனுப்புவதற்காக பஜார் தபால் ஆபீஸிற்கு கும்பகோணம் பாங்கி லிமிடெட்டிலிருந்து அனுப்பப்பட்ட இன்ஷ்யூர் கவர் ஒன்று, சென்ற முதல்தேதியன்று, தபால் ஆபீஸில் களவாடப்பட்டுவிட்டது. அக்கவரில் ரூ 600 இருந்ததாம். அதைக்கொண்டுவந்த வேலைக்காரன் தரையில் விழுந்த ஸ்டாம்பு ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கும்போது அக்கவர் மறைந்துவிட்டதாம்.

தகவல் கிடைத்ததும், போலீஸார் ஸ்தலத்திற்கு விரைந்து அங்கிருந்த உ.ப்போன ஒருவனைக் கைது செய்தனர்.

அமைப்பு வாய்ந்த கொள்ளை கூட்டமொன்றின் வேலைதான் இது என்பது, புலன் விசாரணையின் மூலம் தெரியவருகிறது.

நகர போலீஸ் சப்இன்ஸ்பெக்டரான தோழர் ராமநாதன், புலன் விசாரணை நடத்திவருகிறார்.

---

## கடலில் கடும் போர்

### யாழ்ப்பாணம் அருகில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 6—

யாழ்ப்பாணம் தீபகற்பத்திலுள்ள வேல் வெட்டித்துறை என்னுமிடத்திற்குச் சில மைல்களுக்கு அப்பால், நடுக் கடலில் கள்ளத்தனமாகப் பொருட்களைக் கடத்திச் செல்லும் ஒரு கூட்டத்திற்கும், அங்கு நிலவாரணைச் சேர்ந்த ஆட்களுக்குமிடையே கடும் போர் நடைபெற்றபோது துப்பாக்கிகள், கத்திகள், இரும்புத்தடிகள், டைனமெட்டுகள் முதலியன தாராளமாக உபயோகிக்கப்பட்டனவென்று செய்தியொன்று கூறுகிறது.

---

## புது ரக பிரிட்டிஷ் விமான உற்பத்தி

லண்டன், ஜூன் 7—

சென்ற ஆண்டில் 23 புது ரக விமானங்கள் பிரிட்டனில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்றும், இதில் மூன்றில் ஒரு பாகம் சிவிலியன் விமானங்கள் என்றும் தெரிய வருகிறது. இவை ஜெட் ரக விமானங்கள் என்று கூறப்படுகின்றன.

---

## கட்டுப்பாட்டை மீறும் கட்டிடங்கள்

### இடித்துத் - - தள்ளப்படுகின்றன

ரோம், ஜூன் 7—

இதாலியில் லைசென்ஸ் பெறுமல் மூன்று மாடிக்குமேல் மாடிவைத்துக் கட்டப்பட்டு வருவதை எதிர்த்து, இதாலிய அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர். அதிகப்படியாகக் கட்டப்பட்டுவரும் மாடிகள், இடித்துத் தள்ளப்பட்டு வருகின்றன.

ரோமிலும் 14 மாடியுள்ள புது கட்டிடத்தில் மேல் 4 மாடிகளை லைசென்ஸ் இன்றி கட்டியதற்காக, அதிகாரிகள் இடித்துத் தள்ளிவிட்டனர். இதை எதிர்த்து கட்டிட சொந்தக்காரர்கள் இதாலியின் உயர்தரக் கோர்டில் மனுச்செய்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வளவு மாடிகளுக்குமேல் கட்டக்கூடாது என்று, இதாலியில் ஒழுங்குவரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.


மதுரை மாவட்ட

# தி. மு. கழக முதல் மாநாடு

ஜூன் திங்கள் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் "செல்வம் பந்தலில்" நடைபெறும்

மாநாடு சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு

தோழர் டி. வி. நமசிவாயம் இன்னிசை அரங்குடன் துவங்கும்

★

தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்:- தோழர் கே. கே. நீலமேகம்

வரவேற்புத் தலைவர்:- தா. ஆவுடையப்பன்

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்கிறார்கள்

சனி இரவு "சிலை" நாடகம்

(மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தார் நடிப்பது)

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்

ஞாயிறு இரவு "சந்திரமோகன்" நாடகம்

(கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ நடிப்பது)

தோழர் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

| கட்டண விவரம் : | மாநாட்டுக் கட்டணம் : | |
|---|---|---|
| நாடகங்களுக்குக் கட்டணமில்லை. | வரவேற்பாளர் (உணவுடன்) | ரூ. 5 |
| பெண்களுக்கு மாநாட்டுக் கட்டணம் இல்லை. | பிரதிநிதி .... | ரூ. 2 |
| உணவுக் கட்டணம் உண்டு | பார்வையாளர் .... | ரூ. 1 |

சனி இரவு உணவும், ஞாயிறுகாலைச் சிற்றுண்டியும் தனிச் சீட்டு ரூ. 1—0—0

ஞாயிறு பகல், இரவு இருவேளை உணவுக்கும் தனிச் சீட்டு ரூ. 1—0—0

வரவேற்புக் குழுவினர்.


## கள்ளர் தரும் தொல்லை

### ஓடும் ரயிலைத்தாக்கினர்

சிங்கப்பூர், ஜூன் 7—

கோலாலம்பூர்-சிங்கப்பூர் இரவு மெயில் மீது, இன்று பகல் ஏராளமான கள்ளர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் ஒரு இந்தியப் பெண், ஒரு பிரிட்டிஷ் இராணுவ காப்டனின் மனைவி, ஒரு பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரி, ஒரு சுர்க்கா சிப்பாய், ஒரு சீனர் முதலியவர்கள் காயமுண்டனர். இந்த ரயில், ஜோஹூர் வழியாகச் செல்லும் போது தாக்கப்பட்டது.

---

## யாதும் ஊரே!

ரோம், ஜூன் 6—

தென்னாப்பிரிக்காவில் நிலாவட் என்ற இடத்திலிருந்து புறப்பட்ட இரு சுதேசப் பெண்கள் பாஸ்போர்ட் இல்லாமல் ஸ்பெயின், போர்ச்சுகல், இதாலி ஆகிய நாடுகளில் பிரயாணம் செய்திருக்கின்றனர் என்பதை, இதாலிய போலீஸார் கண்டுபிடித்து விசாரித்து வருகின்றனர்.

---

## கடலில் விமானம் மூழ்கியது

மியாமி, ஜூன் 6—

அறுபத்தைந்து பிரயாணிகளுடன் சென்ற விமானம் ஒன்று, பிளாரிடா அருகே அட்லாண்டிக் கடலில் இன்று மூழ்கியதாகச் செய்தி வந்துள்ளது. அதைத் தேடுவதற்காக, வேறு பல விமானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## சியாங் தூக்கில் தொங்குவார்!

### மாஸ்கோ வானொலி அறிவிப்பு

லண்டன், ஜூன் 7—

ஜெனரலிஸிமோ சியாங்கே ஷேக்கை சீனக் கம்யூனிஸ்டுகள் பிடித்துக் கொண்டால், அவர்கள் அவருக்கு யுத்தக் குற்றவாளி என்ற முறையில் தூக்குத் தண்டனை விதிப்பார்களென்று, சென்ற வியாழக்கிழமையன்று மாஸ்கோ வானொலி அறிவித்தது.

---

## நீதிபதிக்குத் தண்டனை! 7000 தடவை ஏமாற்றினாராம்

பெர்லின், ஜூன் 7—

ஜோஸப் பிராம் என்கிற தொழிலாளி ஒருவன் தான் ஒரு நீதிபதி போல் கிழக்கு ஜெர்மன் கோர்ட்டில் இரண்டுவருடகாலமாகநடித்து வந்திருப்பது இப்பொழுது தெரியவருகிறது. இந்த இரண்டு வருடகாலத்தில் சுமார் 7000 வழக்குகளில் இவர் தீர்ப்பு கூறியிருக்கிறாராம். விஷயம் கண்டுபிடிக்கப்பட்டு இவர் நீதி செலுத்திய கோர்ட்டிலேயே விசாரிக்கப்பட்டு 4 வருட கடுங்காவல் தண்டனை இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இவர் அளித்துள்ள தீர்ப்புகள் மிகவும் நியாயமானதாகவே இருப்பதால் அவைகளை மாற்றவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

## தி. மு. க. துவக்க விழா

ஆரூர், ஜூன் 6—

4—6—50 சனி மாலை பெரியார் மைதானத்தில், தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் தோழர் பி. தங்கராஜு தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழியர் இராமாமிர்தத்தம்மையார் தோழர்கள் எஸ். செழுமாறன், எ. டி. அருணாசலம், ஜி. ஜி. ராஜன், மீனாட்சிசுந்தரம் முதலியோர் பேசினர். தோழர் பி. கைலாசம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

---


## ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் "மாலைமணி" விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை.

திருச்சி

குடியாத்தம்

தஞ்சை

மானேஜர்
"மாலைமணி"
சென்னை—1.


Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.